**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 142 / 2019**

**பி.வா.சா.1 - ரெத்தினக்குமார் 12.12.2024**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா 9வது லக்க சொத்து 19.09.1969 தேதியிட்ட பதிவு செய்த விடுதலை பத்திரம் மூலம் பாத்தியமானது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1969 க்கு முன்பு தாவா 9 வதுலக்க சொத்து யாருக்கு பாத்தியம் என்று நான் என் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா 9வது லக்க சொத்தில் ஒரு பகுதி பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 கிரையப் பத்திரங்கள் மூலம் கொசுவாயிக்கு ஒரு பகுதி பாத்தியப்பட்டது என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். கொசுவாயிக்கு சுப்பையா கோனார் மற்றும் தங்கசாமி கோனார் ஆகிய 2 மகன்கள் உண்டு. கொசுவாயியின் கணவர் பெயர் வெள்ளைச்சாமி கோனார். கொசுவாயியின் கணவர் தான் வெள்ளைச்சாமி என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆவணங்களில் காளிமுத்து கண்காணியின் மகள் கொசுவாயி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது கணவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆவணங்களில் என்ன நில அளவையின் படி பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சமஸ்தான காலத்தில் உள்ள அளவீடு முறைப்படி குறுக்கம் அளவீடு படி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு குறுக்கம் என்பது சுமார் 50 முதல் 52 செண்டு ஆகும்.

மேற்படி பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆவணங்கள் மூலம் கொசுவாயி மொத்த விஸ்தீரணமான 7 குறுக்கத்தில் 5 குறுக்கத்தை

கிரையம் பெற்றுள்ளார். பி.வா.சா.ஆ.25 ஆவணத்தின் படி எத்தனை குறுக்கம் கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2 குறுக்கம் கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.26 ஆவணத்தின் படி எத்தனை குறுக்கம் கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 3 குறுக்கம் கிரையம் பெற்றுள்ளார்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.26 ஆவணத்தில் உத்தேசமாக குறுக்கம் 7 கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.27 ஆவணத்தில் படுகை புஞ்சை குறுக்கம் 7 ல் எங்களில் 1வது நபரும் மேற்படியாருடன் சேர்ந்து கிரையம் பெற்ற முத்துச்சாமிகோன் மகன் கண்ணுச்சாமி கோனும் சேர்ந்து இந்த பத்திரம் எழுதி வாங்குபவர்களுக்கு (கொசுவாயி) ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்திருக்கிற கீழ்புறம் குறுக்கம் 3 போக பாக்கி மேல்புறம் குறுக்கம் 4 ல் கண்ணுச்சாமி கோனுக்கு மேல்புறம் பாதி போக கீழ்புறம் எங்கள் பாதிக்கு குறுக்கம் 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பி.வா.சா.ஈ.25 மற்றும் பி.வா.சா.ஆ.26 ன் படி கொசுவாயி மொத்தம் 3 குறுக்கம் கிரையம் வாங்கியுள்ளார். பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆவணங்களின் படி கொசுவாயிக்கு 5 குறுக்கம் (2 ஏக்கர் 38 சென்டு) பாத்தியம் என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 எஸ்.எல்.ஆரில் தாவா 9 வது லக்க சொத்து வெள்ளைச்சாமி கோன் மகன் சுப்பையா கோன், முத்துக்கோன் மகன் கண்ணுச்சாமி கோன் பெயரில் பதிவு உள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பு தாவா 9 வது லக்க சொத்து முத்துக்கோன் பெயரில் மட்டும் உள்ளதாக வா.சா.ஆ.9 எஸ்.எல்.ஆரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கொசுவாயி பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆகிய ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்ற சொத்து அவரது காலத்திற்கு பின்பு அவரது

மகன்களான சுப்பையா கோனார் மற்றும் தங்கசாமி கோனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 எஸ்.எல்.ஆரில் தங்கசாமி கோனார் பெயர் இல்லை என்றால் சரிதான். தாவா 9 வது லக்க சொத்தில் சுப்பையா கோனார் தனது தம்பி தங்கசாமி கோனாருக்கு பாகம் கொடுக்கவில்லை அதற்கு பதிலாக கிராமங்களில் உள்ள சொத்தை சுப்பையா கோனார் தனது தம்பி தங்கசாமிகோனாருக்கு கொடுத்துள்ளார்.

தாவா 9 வது லக்க சொத்து வைகை ஆற்றுக்கு வடக்கு பக்கம் உள்ளது. தாவா 9 வது லக்க சொத்து கால்பிரவு கிராமத்தில் உள்ளது. வெள்ளையத்தேவன் கரிசல்குளம் கிராமம் வைகை ஆற்றுக்கு தெற்கு பக்கம் உள்ளது. மேற்படி வெள்ளையத்தேவன் கரிசல்குளம் கிராமம் செய்குளத்தூர் குரூப்பை சேர்ந்தது. பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆவணங்களிலும் தாவா 9 வது லக்க சொத்து வைகை ஆற்றுக்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 9 வது லக்க சொத்து வெள்ளையத்தேவன் கரிசல்குளம் கிராமத்தில் உள்ளதாகத்தான மேற்படி 3 ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த காலத்தில் தாவா சொத்து கரிசல்குளம் எல்கைக்கு உட்பட்டதாக இருந்து பின்னாளில் கால்பிரவு கிராமத்திற்கு மாற்றப்பட்டிருக்கலாம்.

தாவா 9 வது லக்க சொத்திற்கு கிழக்கு பக்கம் சுப்பையா கோனாரின் தம்பி தங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சுமார் 3 1/2 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் அது தங்கசாமியின் மனைவி ருக்குமணி அம்மாள் பெயரில் உள்ளது. ருக்குமணி அம்மாளுக்கு அது கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். ருக்குமணி அம்மாள் நாட்டரசன் கோட்டையை சேர்ந்த செட்டியார் ஒருவரிடமிருந்து கிரையம் வாங்கினார். தங்கச்சாமி மனைவி ருக்குமணி, செட்டியாரிடமிருந்து கிரையம் வாங்கவில்லை என்றும் அந்த சொத்து தான்

கொசுவாயி பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆவணம் மூலம் கிரையம் பெற்ற சொத்தாகும் என்றால் சரியல்ல.



பி.வா.சா.ஆ.1 விடுதலை பத்திரத்தில் 09.12.1954 ல் சுப்பையாக் கோன் மற்றும் தங்கச்சாமி கோன் ஆகிய நாங்கள் இருவரும் ரூ.300/-க்கு செட்டில்மெண்ட் மூலம் மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 2454/54 நம்பராக டிரஸ்டியாக இருந்து நடத்துவதற்காக டிரஸ்ட்டுக்கு பாத்தியப்படுத்தி கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ எண் 241/678 மற்றும் சிவகங்கை சப் கோர்ட்டுல் மே.மு.வ.எண் 69/69 வழக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி இரு வழக்குகளிலும் ஏற்பட்ட சமரச தீர்ப்பின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரு வழக்குகளின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நான் தாக்கல் செய்யவில்லை. ஏற்கனவே தாவா 9 வது இலக்க சொத்தையும் இதர சொத்துக்களையும் பொறுத்து அசல் வழக்கு எண்.94/2018 சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது இந்த நீதிமன்றத்தில் மு.வ.எண் 266/2019 என நிலுவையில் இருந்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வாதி 6 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான்.

அந்த வழக்கு கடந்த 02.08.2022 அன்று எனது வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கை ஏன் நான் மீண்டும் கோப்பிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நான் எனது நிலத்தில் போர்வெல் அமைத்துவிட்டதால் அந்த வழக்கின் பரிகாரம் தேவையில்லை என்று நடவடிக்கை

எடுக்கவில்லை. அந்த வழக்கில் நான் 14 சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் தான் பி.வா.சா.ஆ.23 மற்றும் பி.வா.சா.ஆ.24 ஆகும். அந்த வழக்கில் இந்த



வாதியை எதற்காக 6 வது பிரதிவாதியாக சேர்த்தேன் என்றால் எனது அப்பாவின் பூர்வீக சொத்தில் பங்கு கேட்டதால் சேர்த்தேன். மேற்கண்ட 14 சொத்துக்களில் பி செட்டியூல் சொத்தை தவிர இதர 13 லக்க சொத்துக்களுக்கும் சேர்த்து தான் இந்த வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதியின் பாகத்தை அபகரிக்கும் எண்ணத்தில் நானும் இதர பிரதிவாதிகளும் கூட்டாக இருந்து கொண்டு அசல் வழக்கு எண் 266/2019 வழக்கை தாக்கல் செய்து பின்னர் எங்களுக்குள் அந்த வழக்கில் கண்ட சொத்துக்களை பிரித்துக்கொள்வது என பேசி முடிவு செய்து அந்த வழக்கில் ஆஜராகாமல் வேண்டுமென்றே தள்ளுபடிக்கு விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.25 பி.வா.சா.ஆ.26 பி.வா.சா.ஆ.27 ஆவணங்களுக்கும் தாவா 9 வது லக்க சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள ருக்குமணி அம்மாள் சொத்திற்கு உரிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கை பொறுத்து வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதியின் தாயார் வழியில் வாதிக்கு கிடைக்கக்கூடிய பாகத்தை அபகரிக்கும் நோக்குடன் எனது தகப்பனார் வழி முன்னோர்கள் செயல்பட்டு வருவாய் துறை ஆவணங்களை மோசடியாக மாற்றம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. கண்ணுச்சாமி கோனார் பெயரிலுள்ள சொத்துக்கள் எனது தகப்பனார் மருதானந்தம் பெயருக்கோ எனது தாயார் பொன்னம்மாள் பெயருக்கோ

மாறுதல் செய்வதற்கு அடிப்படை காரணமாக ஏதாவது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. பதிவு செய்யப்படாத ஆவணங்களின்றி எனது தகப்பனார் மற்றும் தாயார் பெயரில் மாறுதல் செய்யப்பட்ட வருவாய் துறை ஆவணங்கள் வாதிக்கு தாவா சொத்தை பொறுத்துள்ள உரிமையையும் பாத்தியத்தையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை